[1981 பிப்ரவரி 28

(4) ஒத்திவைப்புத் தீர்மானம்.

சென்னையில் தி. மு. க. பேரணி மீது போலீசார் எடுத்துக்கொண்ட நடவடிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கடந்த 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 22 ஆம் தேதி அன்று கைலாசம் கமிஷன் நியமனம் குறித்து பேரணி நடத்திய தி.மு.க. தொண்டர்களையும், பொது மக்களையும் போலீசார் தடியடிப் பிரயோகம் செய்தும் கண்ணீர்புகை பிரயோகம் செய்தும், கழகத் தோழர்களுக்கும் பொதுமக்களுக்கும் காயமும் தொல்லையும் உண்டாக்கியது குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டு திரு. என். வி. என். சோமு அவர்கள் ஒரு தீர்மானம் கொடுத்துள்ளார். இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்துச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். வி. என். சோமு: பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 22 ஆம் தேதி ஞாயிறு அன்று தமிழ்நாடு அரசின் எரிசாராய ஊழலைக் கண்டித்தும், அதற்காக நியமிக்கப்பட்டுள்ள ஓய்வுபெற்ற நீதிபதி கைலாசம் கமிஷன் வெறும் கண்துடைப்புக் கமிஷன் என்று எங்களுடைய அதிருப்தியைத் தெரிவிக்க கமிஷன் அலுவலமாக அறிவிக்கப்பட்டுள்ள சென்னையில் உள்ள கைலாசம் இல்லத்திற்குச் சென்று மகஜர் கொடுக்கும் அமைதியான பேரணியை நடத்த இந்த அரசு அனுமதிக்காததால், தடையை மீறி அணி வகுத்து நின்ற பல்லாயிரக்கணக்கான தொண்டர்களில் 3,000 பேர்களை காவல்துறையினர் கைது செய்து, சுமார் 40 போலீஸ் லாரிகளில் ஏற்றிச் சென்றனர். இந்தக் கைது பிற்பகல் 3 முதல் 4 மணி வரையில் நடைபெற்றது. அதற்குப் பிறகும், கைதாகத் தயாராக இருந்த ஆயிரக்கணக்கான தொண்டர்களை கைது செய்ய வாகன வசதி அற்று தத்தளித்த போலீசார் அவர்கள் மீது தடியடிப்பிரயோகம், கண்ணீர்ப்புகைபிரயோகம் செய்து, கூடியிருந்த கழகத் தோழர்களை, பொதுமக்களை தடியால் தாக்கி காயப்படுத்தி, தேனாம்பேட்டையிலிருந்து ஆயிரம் விளக்கு வரையில் மிருகத்தனமாக விரட்டியுள்ளனர். பேரணிக்கு வந்த கழகத் தோழர்கள் மீது ஆளும்கட்சிக்காரர்கள் வன்முறை தாக்குதல் நடத்தியுள்ளனர். ஆளும்கட்சியின் வன்முறையைத் தடுத்து நிறுத்த முடியாத போலீசார் கழகத்தினர் மீது தடியடிப் பிரயோகமும், கண்ணீர்ப்புகைப் பிரயோகமும் செய்தது அநீதியும் அக்கிரமும் ஆகும். இதற்கு முன்னால் திராவிட முன்னேற்றக் கழகம் பல பேரணிகளை நடத்தியுள்ளது. (குறுக்கீடு)

1981 பிப்ரவரி 28] [திரு. என். வ். என். சோமு]

திரு. இரா. முத்தையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானம் என்கிற வகையில் விளக்கம் அளித்து வருகின்ற இந்த அவையின் பிரதான எதிர்க்கட்சியின் உறுப்பினரான திரு. என். வி. என். சோமு அவர்கள் 22-ம் தேதி ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் அவர்களுடைய கட்சியினரை தாக்கியதாக உறுதியாகச் சொல்கிறார். எந்த ஆதாரத்தோடு அப்படிச் சொல்கிறார் ? (குறுக்கீடு) இதைப்போனறு அவர்கள் போகிற போக்கில் ஆளும் கட்சிக்காரர்கள் மீது எந்த விதமான ஆதாரமும் இல்லாமல் குற்றச்சாட்டு சொல்வதை தாங்கள் அனுமதிக்கிறீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது பேசுகின்ற உறுப்பினர்கள் எந்த வகையில் அந்தத் தீர்மானம் குறித்து விவாதிக்க சபையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்கிற அளவிற்கு அதனுடைய முக்கியத்துவம் குறித்த சம்பவங்களைக் குறிப்பிட்டால் போதும்.

திரு. என். வி. என். சோமு : இதற்கு முன்னால் திராவிட முன்னேற்றக் கழகம் பல பேரணிகளை அமைதியாகவும், கண்ணியத்துடனும் நடத்தியுள்ளது. 1980-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 15-ஆம் நாள் அன்று அ.இ.அ.தி.மு.க. அரசின மீது ஊழல் புகார் பட்டியலை—இன்னா 40 என தலைவர் கலைஞர் அவர்களால் பெயர் சூட்டப்பட்ட பட்டியலை—கலைஞர் தலைமையில் பல்லாயிரக்கணக்கானோர் சென்று ஆளுநரிடம் அளித்தார்கள். அதைப்போன்று, இந்த ஆண்டு முதல் நாள் அனறு தேசிய பாதுகாப்புச் சட்டத்தைப் பயன்படுத்தி, அரசின் எதிரிகளைப் பழிவாங்கும் ஆகாத போக்கைக் கைவிடுமாறு கேட்டு எங்கள் தலைவர் கலைஞர் தலைமையில் மாபெரும் பேரணி ஆளுநர் மாளிகைக்குச் சென்றது. அந்தப் பேரணியும் அமைதியாக நடைபெற்றது. ஆனால், 1981-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 22-ஆம் நாள் அனறு கமிஷன் அலுவலகம் என்று அறிவிக்கப்பட்டுள்ள கைலாசம் வீட்டுக்குச் செல்ல ஏன் தடைவிதிக்கப்பட்டது? தேனாம்பேட்டை அன்பகம் வரையில் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு இருந்தனர். ஏராளமான பேர்கள் கைதாயினர். எங்களுடைய மாவட்டச் செயலாளர் மேலவை உறுப்பினர் ஆர். டி. சீத்தாபதி, மு. க. ஸ்டாலின், முன்னாள் மேயர் சம்பந்தம், முன்னாள் மேலவை உறுப்பினர் அலமேலு அம்மாள், எலமந்தா, சற்குணம் போன்று ஆயிரக்கணக்கான பேர் கைது செய்யப்பட்டார்கள். 40-க்கும் மேற்பட்ட போலீஸ் லாரிகளில் 3,000-க்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

[முற்பகல் 10—20]

இந்த கைது 3 மணி முதல் 4 மணி வரையில் நடைபெற்றது. அப்போதும் ஆயிரக்கணக்கில் கழகத் தோழர்கள் திரண்டு வந்தார்கள். அவர்களைக் கைது செய்ய லாரி இல்லாமல் தத்தளிதத

[திரு. என். வி. என். சோமு] [1981 பிப்ரவரி 28

போலீசார் தடியடிப் பிரயோகம் செய்தார்கள் ; கண்ணீர் புகைக் குண்டு வெடிப்பும் செய்தார்கள். அப்போது ஆளும் கட்சியினர் கழகத் தொண்டர்களைத் தாக்கினார்கள். (குறுக்கீடுகள்.)

There is no point of order. It is unnecessary. I crave the protection of the Chair.

MR. SPEAKER : I am ready to protect you. The problem is, you must not narrate the entire thing to this august House. It has already been published in the Press. It is not a new thing to the House also.

திரு. என். வி. என். சோமு : நாங்கள் தடியடிப் பிரயோகத் திற்கு ஆளாகி, தாக்கப்பட்டிருக்கிறோம். இதை இங்கே சொல்லாமல் வேறு எங்கே போய் சொல்வது ?

I want to justify the motion.

அதைப்போலவே கைலாசம் கமிஷன் ஆணையை எரித்த நாஞ்சிலார் அவர்கள் பொதுக் கூட்டத்திலே அறிவித்தார்கள். பொதுக் கூட்டத்திலே பேசி முடித்துவிட்டு நான் வீட்டுக்கு அமைதியாக காரிலே போய்க்கொண்டிருப்பேன். என்னை வீட்டிலே வந்து கைது செய்யலாம் அல்லது வேறு இடத்திலே அமைதியான முறையில் கைது செய்யலாம் என்று சொல்லி, பேசி முடித்து விட்டு போய்க்கொண்டிருந்தார்கள். வழியிலே, அங்கே ஒரு சிறிய சந்தில் வரும்போது முன்னாள் மேயர் மைனர் மோசஸ், ஏ. கே. ஜகதீசன், மணிமாறன், சந்தான கிருஷ்ணன் ஆகியோரை கைது செய்தார்கள். பெரிய பரபரப்பு ஏற்பட்டது. ஆனால், அப்போதும் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் பொறுமையோடு இருந்து, நாஞ்சிலாரையும் மற்றவர்களையும் வழி அனுப்பி வைத்தார்கள். ஆகையால், போலீசார் வேண்டுமென்றே திட்டமிட்டு தடியடிப்பிரயோகமும், கண்ணீர்ப்புகைப் பிரயோகமும் செய்திருக்கிறார்கள். இந்த அக்கிரமத்தையும் போலீசாரின் அடக்கு முறையையும் அநீதியையும் பற்றி விரிவாக விவாதிக்க இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு, தற்போது தமிழ்நாடு முழுவதும் 144 தடை உத்திரவு பிறப்பித்திருப்பதனால் ஒரு கொந்தளிப்பும் பரபரப்பும் ஏற்பட்டிருக்கிறது. அதையும் சேர்த்து விவாதிக்க இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த அரசுக்குக் கிடைத்திருக்கிற தகவல்படி 1981-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 22-ஆம் நாள் அன்று மதியம் 3 மணியளவில் ஆழ்வார்பேட்டையிலுள்ள நீதிபதி திரு. கைலாசம் அவர்கள் வீட்டுக்கு ஊர்வலம் செல்லும் நோக்கத்தோடு அண்ணா சாலையிலுள்ள அன்பகத்தில் சென்னை மாவட்ட

திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர் திரு. ஆர். டி. சீத்தா பதி தலைமையில் திராவிட முனனேற்றக் கழகத்தினர் கூடி இருந்தார்கள். நீதிபதி திரு. கைலாசம் அவர்கள் வசாரணைக் கமிஷனிலிருந்து விலகவேண்டுமென்று கேட்டு அவருக்கு ஒரு வண் ணப்பம் கொடுப்பதும் அவர்களுடைய நோக்கமாகும். '' எம். ஜி. ஆர். அரசு எரிசாராயம் ஊழல்—கைலாசம் கமிஷன் எதிர்ப்பு தி.மு.க. பேரணி—22–2–1981 '' என்று எழுதப்பட்ட தட்டியையும் எடுத்துக்கொண்டு, அமுலில் இருக்கும் தடை உத் தரவை மீறி போக்குவரத்துக்கு பெரும் இடைஞ்சலாக்கி, ஊர் வலம் செல்ல ஆரம்பித்தபோது திரு. ஆர்.டி. சீததாபதி அவர்களும் மற்றவர்களும் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர்.

மேற்கூறியவர்கள் கைதானதும், அங்கிருந்த கூட்டத்தினர் காவல் துறையினர் மீதும், பொது மக்கள் மீதும் கற்களையும் மற்ற பொருட்களையும் வீச ஆரம்பித்தனர். அந்தப் பகுதியி லுள்ள அண்ணா திராவிட முனனேற்றக் கழகக் கொடிமரம் ஒன்றையும் முறித்து, அக்கூட்டம் கட்டுக்கடங்காது, பொது அமைதிக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் பொதுச் சொத்துக் களை நாசப்படுத்த ஆரம்பித்தது. எனவே, தகுந்த எச்சரிக் கைக்குப் பின்னர், காவல் துறையினரால் நான்கு முறை கண்ணீர்ப் புகை குண்டு வெடிக்கப்பட்டது. வன்முறையில் ஈடுபட்ட கூட் டத்தினரை காவல் துறையினர் துரத்தினர். சிறிது நேரத்திற்குப் பின் அமைதி ஏற்பட்டது. காவல்துறை வண்டிகள் இரண்டும் ஒரு சில பல்லவன் போக்குவரத்துக் கழக பேருந்துகளும், தனி யார் கார் ஒன்றும் சேதமடைந்தன. உதவிக் கமிஷனர் ஒருவர் உட்பட காவல்துறையைச் சேர்ந்த 8 பேர் இந்த அமளியில் காயமடைந்தனர்.

1981-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 22-ஆம் நாள் அன்றே, மாலை 4–15 மணியளவில் காவலர்களையும் தடுத்து, நீதிபதி திரு கைலாசம் அவர்களின் வீட்டிற்குள் புக முயற்சித்தபோது திரு. கேசவபிரகாசம் என்பவரும், திரு. சேவியர் என்ற மற் றொருவரும் கைது செய்யப்பட்டனர். இச்சம்பவங்களின் தொடர்பாக மொத்தம் 431 பேர்கள் கைது செய்யப்பட்டு காவ லில் வைக்கப்பட்டனர். 16 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள் ளன. தகுந்த போலீஸ் பாதுகாப்புக்கும், ரோந்துக்கும் ஏற்பாடு செய்யப்பட்டது வழக்குகள் நீதிமன்றத்தில் இருப்பதின் மூலம் வழக்குகள் விசாரிக்கப்பட்டு உண்மை வெளிப்படும். எனவே, இச்சம்பவம் குறித்து விவாதிக்க பேரவையின் ஏனைய அலுவல் களை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று தெரி வித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச் சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.